# இரண்டாவது பாடம்

التراويح و ليلة القدر

## இரவுத்தொழுகையும் லைலத்துல் கத்ரும்

1 - باب فضل صلاة التراويح

## தராவீஹ் தொழுகையும் அதன் சிறப்புகளும்

 عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : " مَنْ قَامَ رَمَضَانَ إِيمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ

**அபூஹுரைரா (ரலி) - ரமழானில் யார் ஈமானோடும் நன்மையை எதிர்பார்த்தும் இரவில் நின்று வணங்குகிறாரோ அவருக்கு முன் சென்ற பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டு விடும்.(புஹாரி)**

 عن أبي سلمة بن عبد الرحمن أنه سأل عائشة كيف كانت صلاة رسول الله صلى الله عليه وسلم في رمضان قالت ما كان رسول الله صلى الله عليه وسلم يزيد في رمضان ولا في غيره على إحدى عشرة ركعة يصلي أربعا فلا تسأل عن حسنهن وطولهن ثم يصلي أربعا فلا تسأل عن حسنهن وطولهن ثم يصلي ثلاثا فقالت عائشة فقلت يا رسول الله أتنام قبل أن توتر فقال يا عائشة إن عيني تنامان ولا ينام قلبي

**அபூஸலமா இப்னு அப்துர் ரஹ்மான் அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்களுடைய தொழுகை ரமழானில் எப்படி இருந்தது? என்று கேட்டார்கள். அதற்கு ஆயிஷா (ரலி) - நபி (ஸல்) அவர்கள் ரமழானிலோ ரமழான் அல்லாத காலங்களிலோ நபி (ஸல்) அவர்கள் 11 ரக்அத்துக்கு மேல் தொழுததில்லை.4 ரக்அத்துக்கள் தொழுவார்கள் அதனுடைய அளவையோ நீளத்தையோ பற்றி கேட்காதீர்கள் பின்னர் 4 ரக்அத்துதொழுவார்கள் அதனுடைய அளவையோ நீளத்தையோ பற்றி கேட்காதீர்கள் பின்னர் 3 ரக்அத்துக்கள் தொழுவார்கள். நான் நபி (ஸல்) அவர்களிடம் வித்ரு தொழுவதற்கு முன்னால் தூங்குகிறீர்களா என்று கேட்டபோது என்னுடைய கண்கள் உறங்கினாலும் உள்ளம் உறங்குவதில்லை என்று பதிலளித்தார்கள்.**

 أَنَّ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا أَخْبَرَتْهُ ، " أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ خَرَجَ لَيْلَةً مِنْ جَوْفِ اللَّيْلِ فَصَلَّى فِي الْمَسْجِدِ وَصَلَّى رِجَالٌ بِصَلَاتِهِ ، فَأَصْبَحَ النَّاسُ فَتَحَدَّثُوا ، فَاجْتَمَعَ أَكْثَرُ مِنْهُمْ فَصَلَّى فَصَلَّوْا مَعَهُ ، فَأَصْبَحَ النَّاسُ فَتَحَدَّثُوا ، فَكَثُرَ أَهْلُ الْمَسْجِدِ مِنَ اللَّيْلَةِ الثَّالِثَةِ ، فَخَرَجَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ، فَصَلَّى فَصَلَّوْا بِصَلَاتِهِ ، فَلَمَّا كَانَتِ اللَّيْلَةُ الرَّابِعَةُ ، عَجَزَ الْمَسْجِدُ عَنْ أَهْلِهِ حَتَّى خَرَجَ لِصَلَاةِ الصُّبْحِ ، فَلَمَّا قَضَى الْفَجْرَ ، أَقْبَلَ عَلَى النَّاسِ فَتَشَهَّدَ ، ثُمَّ قَالَ : أَمَّا بَعْدُ ، فَإِنَّهُ لَمْ يَخْفَ عَلَيَّ مَكَانُكُمْ ، وَلَكِنِّي خَشِيتُ أَنْ تُفْتَرَضَ عَلَيْكُمْ فَتَعْجِزُوا عَنْهَا

**ஆயிஷா (ரலி) - ஒரு இரவில் நபி (ஸல்) வெளியில் வந்து பள்ளியில் தொழுதார்கள் அதைக்கண்ட சில மக்கள் பின்னால் நின்று தொழுதார்கள். விடிந்ததும் அதைப்பற்றி மக்கள் பேச ஆரம்பித்தார்கள் அடுத்த நாள் இன்னும் சில மக்கள் கூடி தொழுதார்கள் அடுத்தநாள் காலையிலும் மக்கள் இதைப்பற்றி பேச ஆரம்பித்தார்கள் ஆகவே 3 வது இரவில் பள்ளிவாசலில் மக்கள் அதிகரித்து விட்டனர் அன்றும் நபி (ஸல்) தொழுதபோது மக்கள் நபி (ஸல்) அவர்களுடன் தொழுதார்கள். 4**

**வது இரவு பள்ளியில் இடம் இல்லாத அளவுக்கு நிரம்பிவிட்டது ஆனால் நபி (ஸல்) பள்ளிக்கு சுபுஹ் நேரம் வரை வரவே இல்லை. சுபுஹ் தொழுகைக்கு வந்து தொழுதுவிட்டு மக்களைப்பார்த்து தஷாஹ்ஹுத் சொல்லிவிட்டு நேற்றிரவு நீங்கள் இங்கிருந்து நான் அறியாமலில்லை ஆனால் இந்த தொழுகை ஃபர்ள் ஆகிவிடுமோ என்று பயந்து அது உங்களுக்கு சிரமம் ஆகிவிடுமோ என்று எண்ணினேன். இது ரமழானில் தான் நடந்தது என்று மற்றொரு ஹதீஸின் இடம்பெறுகிறது.**

 عن عبد الرحمن بن عبد القاري أنه قال خرجت مع عمر بن الخطاب رضي الله عنه ليلة في رمضان إلى المسجد فإذا الناس أوزاع متفرقون يصلي الرجل لنفسه ويصلي الرجل فيصلي بصلاته الرهط فقال عمر إني أرى لو جمعت هؤلاء على قارئ واحد لكان أمثل ثم عزم فجمعهم على أبي بن كعب ثم خرجت معه ليلة أخرى والناس يصلون بصلاة قارئهم قال عمر نعم البدعة هذه والتي ينامون عنها أفضل من التي يقومون يريد آخر الليل وكان الناس يقومون أوله

**அப்துல் ரஹ்மான் இப்னு அப்துல் காரி - நான் உமர் (ரலி) உடன் ரமழானின் ஒரு இரவில் பள்ளிக்கு சென்றேன் அங்கு மக்கள் கூட்டம் கூட்டமாக தொழுது கொண்டிருந்தார்கள் ஒரு மனிதர் தனியாக தொழுது கொண்டிருந்தார் சிலர் தனியாக சிலருடன் தொழுதார்கள். இவற்றைக்கண்ட உமர் (ரலி) கூறினார்கள் இவர்களை ஒரு காரி(குர்ஆன் ஓதுபவர்)க்கு கீழ் தொழச்சொன்னால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன் என்றார்கள் பிறகு உபை இப்னு கஹுப் (ரலி) அவர்களை தொழவைக்க சொல்லி கட்டளையிட்டார்கள். பின்னர் நான் ஒரு நாள் உமர் (ரலி) உடன் தொழுகைக்கு சென்றேன் அப்போது மக்கள் அனைவரும் அந்த காரி அவர்களுக்கு பின்னால் தொழுதுகொண்டிருந்தனர் அதைக்கண்ட உமர் (ரலி) இது ஒரு நல்ல பித்அத் ஆகும் (அற்புதமாக இருக்கிறது)
என்று கூறிவிட்டு இவர்கள் எதை விட்டுவிட்டு உறங்குகிறார்களோ அந்த நேரம் இதை விட சிறந்தது. மக்கள் ஆரம்ப நேரத்தில் தொழுது வந்தார்கள்.(புஹாரி)**

2 - باب فضل ليلة القدر والحث على طلبها

## லைலத்துல் கத்ரின் சிறப்பும் அதை அடைவதில் சிறப்புக்களும்

 أن أبا هريرة حدثهم أن رسول الله صلى الله عليه وسلم قال من صام رمضان إيمانا واحتسابا غفر له ما تقدم من ذنبه ومن قام ليلة القدر إيمانا واحتسابا غفر له ما تقدم من ذنبه

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - யார் ஈமானோடும் நன்மையை எதிர்பார்த்தும் ரமழானில் நோன்பு வைக்கிறாரோ அவருடைய முன் சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும். யார் லைலத்துல் கத்ர் இரவில்**

**ஈமானோடும் நன்மையை எதிர்பார்த்தும் நின்று வணங்குகிறாரோ அவருடைய முன் சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும். (புஹாரி)**

 عن عائشة رضِيَ اللهُ عنها أنَّ رسولَ الله صلَّى الله عليه وسلَّمَ قال: ((تَحرُّوا لَيلةَ القَدْرِ في الوَتْرِ من العَشرِ الأواخِرِ من رمضانَ

**ஆயிஷா (ரலி) - நபி (ஸல்) - ரமழானில் இறுதி பத்து நாட்களின் ஒற்றைப்படை இரவுகளில் லைலத்து கதர் இரவுகளை தேடிக்கொள்ளுங்கள் (புஹாரி)**

 وعن زر بن حبيش قال : سألت أبي بن كعب فقلت : إن أخاك ابن مسعود يقول : من يقم الحول يصب ليلة القدر ، فقال - رحمه الله - أراد أن لا يتكل الناس أما إنه قد علم أنها في رمضان ، وأنها في العشر الأواخر وأنها ليلة سبع وعشرين ، ثم حلف لا يستثني أنها ليلة سبع وعشرين ، فقلت : بأي شيء تقول ذلك يا أبا المنذر ؟ قال بالعلامة أو بالآية التي أخبرنا رسول الله - صلى الله عليه وسلم - أنها تطلع يومئذ ، لا شعاع لها ،

**ஸர் இப்னு ஹுபைஷ் - உபை இப்னு கஃப் (ரலி) விடம்"உங்கள் சகோதரர் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் - யார் வருடம் முழுவதும் நின்று வணங்குகிறாரோ அவருக்கு லைலத்துல் கத்ரின் சிறப்பு கிடைக்கும் - என்று கூறுகிறாரே? என்று கேட்டேன். அதற்கு உபை (ரலி); லைலத்துல் கத்ரின் சிறப்பை அறிந்தால் மக்கள் மற்ற நாட்களில் தொழாமல் இருந்து விடுவார்களோ என்று நினைத்து அவர் அவ்வாறு கூறியிருப்பார் என பதிலளித்தார்கள்.**

☆ **ஆனால் லைலத்துல் கத்ர் ரமழானில் தான் என்பதும் அது இறுதி 10ல் என்பதும் 27 வது இரவில் என்பதும் அவருக்குத் தெரியும்.**

☆ **பின்னர் சத்தியமிட்டு அது 27 ஆம் இரவு தான் என்று அவர் கூறியபோது - எப்படி உறுதியாக கூறுகிறீர்கள் என்று கேட்டேன். அப்போது அவர் நபி (ஸல்) கூறிய அடையாளத்தை வைத்து அறிந்து கொண்டேன்(அன்றைய தினம் சூரியன் கதிர்கள் இல்லாமலிருக்கும்) முஸ்லிம்**

## 3 - باب الدعاء ليلة القدر

## லைலத்துல் கத்ரில் துஆ கேட்டல்

 عَنْ عَائِشَةَ - رضي الله عنها - قَالَتْ: « يَا رَسُولَ اللهِ، أَرَأَيْتَ إِنْ وَافَقْتُ لَيْلَةَ الْقَدْرِ، فَبِمَ أَدْعُو؟ قَالَ: " قُولِي: اللَّهُمَّ إِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ، فَاعْفُ

**ஆயிஷா (ரலி) - நான் நபி (ஸல்) அவர்களிடம் லைலத்துல் கத்ரை அறிந்து கொண்டால் நான் என்ன துஆ செய்ய வேண்டும் என்று கேட்டபோது**

اللهم انك عفو تحب العفو فاعف عنى

**(யா அல்லாஹ் நீ மன்னிக்கக் கூடியவன் மன்னிப்பை விரும்புபவன் ஆதலால் என்னை மன்னித்தருள்வாயாக) என கற்றுத்தந்தார்கள் (திர்மிதி - கருத்து முரண்பாடுகள் உள்ளன)**

## 4 - باب الرجال بالنساء فى التراويح

## பெண்களுக்கு ஆண்கள் தராவீஹ் தொழ வைத்தல்

عَنْ هِشَامِ بْنِ عُرْوَةَ ، عَنْ أَبِيهِ أَنَّ ذَكْوَانَ أَبَا عَمْرٍو ، وَكَانَ عَبْدًا لِعَائِشَةَ زَوْجِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَأَعْتَقَتْهُ عَنْ دُبُرٍ مِنْهَا ؛ كَانَ يَقُومُ يَقْرَأُ لَهَا فِي رَمَضَانَ

**உர்வா- தக்வான் அபூ அம்ர் என்பவர் ஆயிஷா (ரலி) யின் அடிமையாக இருந்தார். அவரை தவணை முறையில் விடுவிக்க ஆயிஷா (ரலி) ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அவர் ரமலானில் ஆயிஷா (ரலி) விற்கு தொழவைக்கக் கூடியவராக இருந்தார்.((முவத்தா மாலிக்)**

عروة بن الزبير : أن عمر بن الخطاب رضي الله عنه حين جمع الناس على قيام شهر رمضان ، الرجال على أبي بن كعب ، والنساء على سليمان بن أبي حثمة

**உர்வா - உமர் (ரலி) ரமழானில் மக்களை தொழுவிட்ட ஒன்று சேர்த்தார்கள் அப்போது ஆண்களை உபை இப்னு கஹப் ரலி அவர்களது தலைமையிலும் பெண்களை சுலைமான் இப்னு அபீ ஹத்மா என்பவரது தலைமையிலும் தொழுவிக்க ஏற்பாடு செய்தார்கள். (பைஹகீ பாகம் 2 - 493)**

5 - باب عدد ركعات التراويح

## தராவீஹின் ரக்அத்துக்களின் எண்ணிக்கை

وَعَنْ يَزِيدَ بْنِ رُومَانَ : كَانَ النَّاسُ " يَقُومُونَ فِي زَمَانِ عُمَرَ بْنِ الْخَطَّابِ فِي رَمَضَانَ بِثَلَاثٍ وَعِشْرِينَ رَكْعَةً

**யஜீத் இப்னு ரூமான் - உமர் (ரலி) வின் காலத்தில் மக்கள் 23 ரக்அத்துக்கள் தொழக்கூடியவர்களாக இருந்தார்கள் (பைஹகீ பாகம் 2 - 496 - லயீப் - யஜீத் இப்னு ரூமான் அவர்கள் காலத்திற்கும் உமர் (ரலி) அவர்கள் காலத்திற்கும் 100 வருடம் இடைவெளி இருக்கிறது)**

**☆ முவத்தா மாலிக்கிள் உமர் (ரலி) 11 ரக்அத்துக்கள் தொழவைக்க ஏற்பாடு செய்தார்கள் என்று இடம்பெறுகிறது**

أنبأ أبو الخصيب قال : كان يؤمنا سويد بن غفلة في رمضان فيصلي خمس ترويحات عشرين ركعة .

**அபுல் ஹஸீப் - சுவைத் இப்னு கஃப்லா என்பவர் எங்களுக்கு ரமழானில் 5 தர்வீஹ்(ஒய்வு) அதில் 20 ரக்அத்துக்கள் தொழ வைப்பார்கள்.**

# மூன்றாவது பாடம்

## இஃதிகாஃப் الاعتكاف

1 - باب الاعتكاف في العشر الأواخر

## இறுதி பத்துகளில் இஃதிகாஃப்

عن عبد الله بن عمر رضي الله عنهما قال كان رسول الله صلى الله عليه وسلم يعتكف العشر الأواخر من رمضان

**அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) - நபி (ஸல்) அவர்கள் ரமழானில் இறுதி பத்து நாட்களில் இஃதிகாஃப் இருப்பார்கள் (புஹாரி)**

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ، قَالَ : " كَانَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَعْتَكِفُ فِي الْعَشْرِ الْأَوَاخِرِ مِنْ رَمَضَانَ ، فَلَمْ يَعْتَكِفْ عَامًا ، فَلَمَّا كَانَ الْعَامُ الْمُقْبِلُ اعْتَكَفَ عِشْرِينَ

**அனஸ் இப்னு மாலிக் (ரலி) - நபி (ஸல்) ரமழானில் இறுதி பத்து நாட்களில் இஹ்திகாஃப் இருப்பார்கள், ஒரு வருடம் இருக்கவில்லை அதற்கு அடுத்த வருடம் 20 நாட்கள் இருந்தார்கள். (திர்மிதி 803)**

2 - باب لا يدخل البيت الا لحاجة

## இஹ்திகாஃப் இருப்பவர்கள் தேவையில்லாமல் வீட்டிற்குள் நுழைய கூடாது

 أن عائشة رضي الله عنها زوج النبي صلى الله عليه وسلم قالت وإن كان رسول الله صلى الله عليه وسلم ليدخل علي رأسه وهو في المسجد فأرجله وكان لا يدخل البيت إلا لحاجة إذا كان معتكفا

**ஆயிஷா (ரலி) - நபி (ஸல்) இஹ்திகாஃப் இருக்கும் நிலையில் பள்ளியில் இருந்தவாரே தன் தலையை வீட்டிற்குள் வைப்பார்கள் நான் அவர்களது தலையை வாரி விடுவேன். அந்த நேரங்களில் தேவைக்கு மட்டுமே வீட்டிற்குள் நுழைவார்கள்.(புஹாரி)**

 عن عائشة أنها قالت السنة على المعتكف أن لا يعود مريضا ولا يشهد جنازة ولا يمس امرأة ولا يباشرها ولا يخرج لحاجة إلا لما لا بد منه ولا اعتكاف إلا بصوم ولا اعتكاف إلا في مسجد جامع

**ஆயிஷா (ரலி) - இஹ்திகாஃப் இருப்பவர்கள் நோயாளியை நலம் விசாரிக்க செல்லக்கூடாது, ஜனாஸா வில் கலந்து கொள்ளவோ, மனைவியுடன் உறவு கொள்ளவோ, தொடவோ கூடாது. மிக அவசியமான தேவைகளை தவிர மற்றெதற்கும் வெளியாக கூடாது. நோன்பில்லாமல் இஹ்திகாஃபும் இல்லை. ஜும்மா நடக்கக்கூடிய பள்ளியிலேயே இருக்க வேண்டும்.இது தான் அவர்கள் கடைபிடிக்கவேண்டியவை (அபூதாவூத்- ஹசன் ஸஹீஹ் - கருத்து முரண்பாடு உள்ள செய்தியாக இருக்கிறது)**

3 - باب اعتكاف النساء

## பெண்கள் இஹ்திகாஃப் இருத்தல்

 عن عائشة رضي الله عنها قالت كان النبي صلى الله عليه وسلم يعتكف في العشر الأواخر من رمضان فكنت أضرب له خباء فيصلي الصبح ثم يدخله فاستأذنت حفصة عائشة أن تضرب خباء فأذنت لها فضربت خباء فلما رأته زينب ابنة جحش ضربت خباء آخر فلما أصبح النبي صلى الله عليه وسلم رأى الأخبية فقال ما هذا فأخبر فقال النبي صلى الله عليه وسلم ألبر ترون بهن فترك الاعتكاف ذلك الشهر ثم اعتكف عشرا من شوال

**ஆயிஷா (ரலி) - ரமழானின் இறுதி நாட்களில் நபி (ஸல்) அவர்கள் இஹ்திகாஃப் இருப்பார்கள் நான் நபி (ஸல்) அவர்களுக்கு பள்ளிக்குள் கூடாரத்தை அமைப்பேன். நபி (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழுவார்கள் பின்னர் அதற்குள் நுழைவார்கள். அப்போது ஹப்ஸா (ரலி) ஆயிஷா (ரலி) விடம் கூடாரம் அமைக்குமாறு கேட்டபோது அவ்வாறு செய்யப்பட்டது. ஜைனப் பின்த் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் இதை கண்டதும் அவர்களுக்கும் ஒரு கூடாரம் அமைத்தார்கள். நபி (ஸல்) காலையில் பார்த்தபோது கூடாரங்களை கண்டதும் இவர்கள் நன்மை செய்வதற்கா**

**வந்தார்கள்? என்று கேட்டுவிட்டு தனது கூடாரத்தை கலைத்து விட்டார்கள். அந்த வருடம் நபி (ஸல்) அவர்கள் இஹ்திகாஃப் இருக்கவில்லை. பின்னர் ஷவ்வாலில் 10 நாட்கள் இஹ்திகாஃப் இருந்தார்கள். (புஹாரி)**

عن عائشة رضي الله عنها قالت اعتكفت مع رسول الله صلى الله عليه وسلم امرأة من أزواجه مستحاضة فكانت ترى الحمرة والصفرة فربما وضعنا الطست تحتها وهي تصلي

**ஆயிஷா (ரலி) - நபி (ஸல்) அவர்களுடன் தனது மனைவிகளில் ஒருவர் இஹ்திகாஃப் இருந்தார்கள். அவர்களுக்கு தொடர் உதிரப்போக்கு இருந்தது. அவர்களுக்கு மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களில் உதிரப்போக்கு உண்டாகும். அவர்கள் தொழும் நேரத்தில் உதிரப்போக்கின் காரணத்தால் சில பாத்திரத்தை கீழே வைப்போம். (புஹாரி)**

4 - باب هل يخرج المعتكف لحوائجه

## தன்னுடைய தேவைகளுக்காக இஹ்திகாஃப் இருப்பவர் வெளியே செல்லலாமா?

علي بن الحسين رضي الله عنهما أن صفية زوج النبي صلى الله عليه وسلم أخبرته أنها جاءت إلى رسول الله صلى الله عليه وسلم تزوره في اعتكافه في المسجد في العشر الأواخر من رمضان فتحدثت عنده ساعة ثم قامت تنقلب فقام النبي صلى الله عليه وسلم معها يقلبها حتى إذا بلغت باب المسجد عند باب أم سلمة مر رجلان من الأنصار فسلما على رسول الله صلى الله عليه وسلم فقال لهما النبي صلى الله عليه وسلم على رسلكما إنما هي صفية بنت حيي فقالا سبحان الله يا رسول الله وكبر عليهما فقال النبي صلى الله عليه وسلم إن الشيطان يبلغ من الإنسان مبلغ الدم وإني خشيت أن يقذف في قلوبكما شيئا

**அலீ இப்னு ஹுஸைன் (ரலி) - நபி (ஸல்) அவர்களின் மனைவி ஸஃபிய்யா (ரலி) - நபி (ஸல்) ரமழானின் இறுதி பத்தில் இஹ்திகாஃப் இருந்த வேலையில் அவர்களை சந்திக்க ஸஃபிய்யா (ரலி) வந்தார்கள் பிறகு நபி (ஸல்) அவர்களுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பின்னர் அவர்கள் சென்றார்கள். நபி (ஸல்) அவர்களை விட்டுவிட்டு வர உடன் சென்றார்கள். உம்முஸலாமா (ரலி) அவர்களின் வீட்டின் கதவின் பக்கத்தில் வந்தபோது அன்சாரிகளில் இருவர் அந்த வழியாக சென்ற போது நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொன்னார்கள் அப்போது நபி (ஸல்) கூறினார்கள் நில்லுங்கள் என்னுடன் வருவது என்னுடைய மனைவி ஸஃபிய்யா தான் என்றார்கள். அப்போது அவர்கள் "சுப்ஹானல்லாஹ்! யா ரசூலுல்லாஹ்! என்று கூறினார்கள். ஆனால்; அது அவர்களுக்கு பெரிய பாரமாக இருந்தது. அப்போது நபி (ஸல்) கூறினார்கள் "ஷைத்தான் மனிதர்களின் இரத்த நாளங்களில் இருக்கிறான். உங்கள் உள்ளத்தில் ஷைத்தான் எதையாவது போட்டுவிடுவானோ என்று நான் பயந்துவிட்டேன்" என்று (புஹாரி)**

5 - باب الاجتهاد في العشر الأواخر

## இறுதிப்பத்தில் இபாதத் செய்ய பெரும்முயற்சி எடுத்தல்

□ عن عائشة رضي الله عنها قالت كان النبي صلى الله عليه وسلم إذا دخل العشر شد مئزره وأحيا ليله وأيقظ أهله

**ஆயிஷா (ரலி) - இறுதிப்பத்து நாட்கள் வந்தால் நபி (ஸல்) அவர்கள் தனது ஆடையை இறுக்கிக்கொள்வார்கள், இரவை உயிர்ப்பிப்பார்கள், மேலும் குடும்பத்தை எழுப்பி விடுவார்கள்.**

☆ **முஸ்லிமில் வரும் அறிவிப்பில் - நபி (ஸல்) மிகவும் முயற்சி எடுப்பார்கள் தனது கீழாடையை கட்டிக்கொள்வார்கள்.**

□وعن عائشة قالت : كان رسول الله - صلى الله عليه وسلم - يجتهد في العشر الأواخر ما لا يجتهد في غيره

**ஆயிஷா (ரலி) - நபி (ஸல்) அவர்கள் மற்ற நாட்களில் இல்லாத அளவுக்கு ரமழானுடைய இறுதிப்பத்து நாட்களில் இபாதத் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்.(புஹாரி, முஸ்லீம்)**

## நான்காவது பாடம الفصل الرابع

صيام التطوع

## ஸுன்னத்தான நோன்பு

□ عَنْ عَائِشَةَ زَوْجِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهَا قَالَتْ : " كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَصُومُ حَتَّى نَقُولَ لا يُفْطِرُ ، وَيُفْطِرُ حَتَّى نَقُولَ لا يَصُومُ ، وَمَا رَأَيْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ اسْتَكْمَلَ صِيَامَ شَهْرٍ قَطُّ إِلا رَمَضَانَ ، وَمَا رَأَيْتُهُ فِي شَهْرٍ أَكْثَرَ صِيَامًا مِنْهُ فِي شَعْبَانَ

**ஆயிஷா (ரலி) - இனி நபி (ஸல்) அவர்கள் நோன்பை விடவே மாட்டார்கள் என்று நாங்கள் கூறும் அளவிற்கு நோன்பு வைப்பார்கள். இனி அவர்கள் நோன்பே பிடிக்க மாட்டார்கள் என்று நாங்கள் கூறும் அளவிற்கு நோன்பை விட்டுவிடுவார்கள். ரமழானைத் தவிர வேறெந்த மாதத்திலும் மாதம் முழுவதும் நோன்பு நோற்றதை நான் கண்டதில்லை. ஷஃபான் மாதத்தை தவிர வேறெந்த மாதமும் அதிகமாக நோன்பு நோற்றதையும் நான் கண்டதில்லை.**

2 - باب النهي عن الصوم الدهر والعيدين وايام التشريق

## காலம் முழுவதும், 2 பெருநாள் அன்றும், அய்யாமுத் தஷ்ரீக் அன்றும் நோன்பு பிடிக்கக்கூடாது

□ حَدَّثَنِي عَبْدُ اللَّهِ بْنُ عَمْرِو بْنِ الْعَاصِ ، قَالَ لِي رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : " يَا عَبْدَ اللَّهِ ، أَلَمْ أُخْبَرْ أَنَّكَ تَصُومُ النَّهَارَ ، وَتَقُومُ اللَّيْلَ ؟ " قُلْتُ : بَلَى ، يَا رَسُولَ اللَّهِ ، قَالَ : " فَلا تَفْعَلْ ، صُمْ وَأَفْطِرْ ، وَقُمْ وَنَمْ ، فَإِنَّ لِجَسَدِكَ عَلَيْكَ حَقًّا ، وَإِنَّ لِعَيْنِكَ عَلَيْكَ حَقًّا ، وَإِنَّ لِزَوْجِكَ عَلَيْكَ حَقًّا ، وَإِنَّ لِزَوْرِكَ عَلَيْكَ حَقًّا ، وَإِنَّ بِحَسْبِكَ أَنْ تَصُومَ كُلَّ شَهْرٍ ثَلاثَةَ أَيَّامٍ ، فَإِنَّ لَكَ بِكُلِّ حَسَنَةٍ عَشْرَ أَمْثَالِهَا ، فَإِذَا ذَلِكَ صِيَامُ الدَّهْرِ كُلِّهِ " ، فَشَدَّدْتُ فَشَدَّدَ عَلَيَّ ، قُلْتُ : يَا رَسُولَ اللَّهِ ، إِنِّي أَجِدُ قُوَّةً ، قَالَ : " فَصُمْ صِيَامَ نَبِيِّ اللَّهِ دَاوُدَ ، وَلا تَزِدْ عَلَيْهِ " ، قُلْتُ : وَمَا صِيَامُ نَبِيِّ اللَّهِ دَاوُدَ ؟ قَالَ : " نِصْفُ الدَّهْرِ " ، فَكَانَ عَبْدُ اللَّهِ يَقُولُ بَعْدَ مَا كَبِرَ : يَا لَيْتَنِي قَبِلْتُ رُخْصَةَ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ

**அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) - என்னிடம் நபி (ஸல்) "அப்துல்லாஹ்வே நீங்கள் பகல் முழுவதும் நோன்பு பிடிக்கிறீர்கள் இரவு முழுவதும் வணங்குகிறீர்கள் என்ற செய்தி கிடைத்ததே? என்றார்கள். நான் ஆம் யா ரசூலுல்லாஹ்; என்றபோது இனி அப்படி**

**செய்ய வேண்டாம் என்றார்கள். நோன்பை பிடியுங்கள் மேலும் நோன்பை விடவும் செய்யுங்கள். தொழுங்கள் தூங்கவும் செய்யுங்கள். உங்கள் உடலுக்கு செய்ய வேண்டிய கடமை இருக்கிறது. கண்ணுக்கு செய்ய வேண்டிய கடமை இருக்கிறது. உங்கள் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமை இருக்கிறது. உங்கள் விருந்தாளிக்கு ஒரு கடமை உண்டு. ஒரு மாதத்தில் 3 நோன்புகள் பிடித்தால் உங்களுக்கு போதுமானது. ஏனெனில் ஒவ்வொரு நோன்பிலும் 10 நன்மைகள் உண்டு. அப்படி செய்வதால் நீங்கள் காலம் முழுவதும் நோன்பு பிடித்த நன்மையை பெறுவீர்கள் என்று கூறினார்கள்.**

**☆நான் கடுமைப்படுத்தினேன் எனக்கு கடுமைப்படுத்தப்பட்டது.**

**☆ நான் நபி (ஸல்) அவர்களிடம் கூறினேன் இன்னும் நோன்பு நோற்க எனக்கு சக்தி இருக்கிறதே என்று கூறினேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் தாவூத் (அலை) அவர்களின் நோன்பை பிடியுங்கள் அதை விட அதிகப்படுத்த வேண்டாம் என்றார்கள். தாவூத் (அலி) அவர்களது நோன்பு எப்படி இருந்தது என்று நான் கேட்டபோது அவர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்றார்கள் என்று கூறினார்கள்.**

**☆ அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் வயதான நிலையை அடைந்தபோது நபி (ஸல்) அப்போது தந்த சலுகையை நான் ஏற்றிருக்கக்கூடாதா? என்று கூறினார்கள்(புஹாரி)**

 عن عائشة وعن سالم عن ابن عمر رضي الله عنهم قالا لم يرخص في أيام التشريق أن يصمن إلا لمن لم يجد الهدي

**ஆயிஷா (ரலி) மூலமாக இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள் - அய்யாமுத்தஷ்ரீக்கில் நோன்பு பிடிக்க யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை ஹஜ்ஜில் பலி பிராணி கிடைக்கப்பெறாதவரை தவிர (புஹாரி)**

 عن نبيشة الهذلي قال قال رسول الله صلى الله عليه وسلم أيام التشريق أيام أكل وشرب

**நுபைஷா அல் ஹுதலி (ரலி) - நபி (ஸல்) - அய்யாமு தஷ்ரீக்கின் நாட்கள் உண்ணும் குடிக்கும் நாட்களாகும் (முஸ்லீம்)**

 عن أبي هريرة أن رسول الله صلى الله عليه وسلم نهى عن صيام يومين يوم الفطر ويوم الأضحى

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) இரண்டு நாட்கள் நோன்பு நோற்பதை நபி (ஸல்) தடுத்தார்கள் ஒன்று நோன்பு பெருநாள் மற்றொன்று ஹஜ்ஜு பெருநாள்.(முஸ்லீம்)**

 عن عمران بن حصين قال قيل يا رسول الله إن فلانا لا يفطر نهار الدهر فقال لا أفطر ولا صام

**இம்ரான் இப்னு ஹுசைன் (ரலி) - நபி (ஸல்) அவர்களிடம் "ஒரு மனிதர் இருக்கிறார் அவர் எப்பொழுதும் பகலின் நோன்பு நோற்றுக்கொண்டே**

**இருக்கிறார்" என்று அவரைப்பற்றி கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் அவர் நோன்பு பிடிக்கவுமில்லை நோன்பு திறக்கவுமில்லை என்று பதிலளித்தார்கள் (நஸயீ)**